NT

SINGAPORE – CAMBRIDGE
General Certificate of Education Normal Technical Level

# அடிப்படைத் தமிழ் 1204/1

தாள் 1 (பகுதி 2)

**BASIC TAMIL** **SPECIMEN PAPER**

Paper 1 (Part 2) *With effect from 2024 examination*

**1 hour 10 minutes**
(Total Time for Part 1 and Part 2)

**தேர்வு எழுதுவோர்க்கான குறிப்புகள்**

1 இவ்வினாத்தாள் இரண்டு பகுதிகளைக் கொண்டுள்ளது:
- பகுதி 1 (நடைமுறை சார்ந்த எழுத்துப் படைப்பு)
- பகுதி 2 (மொழி மரபும் பயன்பாடும் மற்றும் கருத்தறிதல்)

2 **பகுதி 2 தேர்வுக்குரிய கால அளவு 40 நிமிடங்கள்**.

3 எல்லா வினாக்களுக்கும் விடையளிக்க வேண்டும். ஒவ்வொரு வினாவிற்கும் தரப்பட்டுள்ள தெரிவுகளுள் ஒன்று மட்டுமே மிகப் பொருத்தமான விடை. அந்த விடைக்குரிய எழுத்துள்ள (A, B, C அல்லது D) வட்டத்தை ‘கிளிக்’ செய்யவும்.

4 தேர்வாளரின் கட்டளைக்கு ஏற்ப ‘**Start**’ என்னும் குறியை அழுத்தவும்.

இவ்வினாத்தாள் 9 அச்சிடப்பட்ட பக்கங்களையும் 1 அச்சிடப்படாத பக்கத்தையும் கொண்டுள்ளது.

Singapore Examinations and Assessment Board

©MOE

## ‘அ’ பிரிவு

**A1 மொழிப் பயன்பாடு (2 மதிப்பெண்கள்)**

பின்வரும் பனுவலில் கோடிட்ட இடங்கள் ஒவ்வொன்றையும் நிரப்புவதற்குரிய நான்கு தெரிவுகள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் மிகப் பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்து அவ்விடைக்குரிய எழுத்துள்ள வட்டத்தை ‘கிளிக்’ செய்யவும்.

தமிழர் பண்பாட்டில் மலர்களுக்குத் தனிச்சிறப்பு உண்டு. பலவகை மலர்களுள் **(1)**___________ விருப்பமான மலர் மல்லிகை ஆகும். மல்லிகைப்பூ மணம் நிறைந்தது மட்டுமன்று. அதில் மருத்துவக் குணங்களும் உள்ளன. மல்லிகைப்பூத் தேநீர் அருந்துவதால் உடலில் நோய் எதிர்ப்புச்சக்தி **(2)**___________ என்று நம்பப்படுகிறது. இதற்காகவே மக்கள் பலரும் மல்லிகைப்பூத் தேநீரை அருந்துகின்றனர்.

**1** (A) தமிழர்களை
(B) தமிழர்களால்
(C) தமிழர்களிடம்
(D) தமிழர்களுக்கு

**2** (A) ஏற்படும்
(B) குறையும்
(C) தோன்றும்
(D) அதிகரிக்கும்

**A2** மொழிப் பயன்பாடு **(3 மதிப்பெண்கள்)**

பின்வரும் பனுவலில் கோடிட்ட இடங்கள் ஒவ்வொன்றையும் நிரப்புவதற்குரிய நான்கு தெரிவுகள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் மிகப் பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்து அவ்விடைக்குரிய எழுத்துள்ள வட்டத்தை 'கிளிக்' செய்யவும்.

| |
|---|
| ஒருமுறை மாவீரர் நெப்போலியன் தமது படைத் தளபதிகளை விருந்துக்கு அழைத்திருந்தார். **(3)**___________ விருந்து நாளன்று தளபதிகள் விருந்துக்கு நேரத்தோடு வரவில்லை. நெப்போலியன் தாம் குறித்த நேரத்தில் தனியாக அமர்ந்து உணவு உண்ண **(4)**___________. அவர் சாப்பிட்டுவிட்டு எழுந்தபோதுதான் தளபதிகள் ஒருவர்பின் ஒருவராக வந்தனர். உடனே நெப்போலியன், "தளபதிகளே! உணவு உண்ணும் நேரம் முடிந்துவிட்டது. இப்பொழுது வேலை செய்யும் நேரம். வாருங்கள்! ஒரு நிமிடத்தைக்கூட **(5)**___________ பணியில் ஈடுபடுவோம்," என்றார். அதைக் கேட்ட தளபதிகள் வாயடைத்து நின்றனர். |

**3** (A) எனவே
(B) ஆனால்
(C) அதனால்
(D) ஆகையால்

**4** (A) தயங்கினார்
(B) வருந்தினார்
(C) எண்ணினார்
(D) தொடங்கினார்

**5** (A) கழிக்காமல்
(B) பார்க்காமல்
(C) சிந்திக்காமல்
(D) வீணாக்காமல்

(அடுத்த பக்கம் பார்க்கவும்)

## ‘ஆ’ பிரிவு

**B3 மரபுத்தொடர்களும் இணைமொழிகளும் (4 மதிப்பெண்கள்)**

பின்வரும் வாக்கியங்களில் ஒவ்வொரு கோடிட்ட இடத்தையும் நிரப்புவதற்கேற்ற மிகப் பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்து அவ்விடைக்குரிய எழுத்துள்ள வட்டத்தை ‘கிளிக்’ செய்யவும்.

**6** கவிதா தன் திறமையை வளர்த்துக்கொள்வதற்குப் பொருத்தமான இணைப்பாட நடவடிக்கையை __________ சிந்தித்து முடிவெடுத்தாள்.

(A) ஆற அமர
(B) அறக்கப் பறக்க
(C) அடக்கவொடுக்கமாக

**7** நகைக்கடை ஒன்றில் நகையைத் திருட முயன்ற ரவி காவலரைக் கண்டதும் __________.

(A) ஓட்டம் பிடித்தான்
(B) இனிக்கப் பேசினான்
(C) காட்டிக் கொடுத்தான்

## ‘இ’ பிரிவு

**C4 கருத்து விளக்கப்படக் கருத்தறிதல் (6 மதிப்பெண்கள்)**

பின்வரும் விளம்பரத்தைக் கருத்தூன்றிப் படிக்கவும். பின்னர், அதையொட்டிய வினாக்களுக்கு மிகப் பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்து அவ்விடைக்குரிய எழுத்துள்ள வட்டத்தை ‘கிளிக்’ செய்யவும்.

**குடியிருப்பாளர்கள் ஒன்றுகூடல் நிகழ்ச்சி**

நாள் : 5 அக்டோபர் 2024 (சனிக்கிழமை)
நேரம் : காலை 9 மணிமுதல் மாலை 6 மணிவரை
இடம் : பிடோக்பி சமூக மன்றம்
ஏற்பாட்டாளர் : பிடோக் வசிப்போர் குழு

பிடோக் வட்டாரக் குடியிருப்பாளர்கள் சந்தித்துக் கலந்துறவாட ஒரு வாய்ப்பு!

**வண்ணம் தீட்டும் போட்டி**

* 10 - 12 வயதுச் சிறுவர்களுக்கு மட்டும்
* மூவர் கொண்ட குழு
* மூவரும் வெவ்வேறு இனத்தைச் சேர்ந்தவர்களாக இருக்க வேண்டும்
* 15 நிமிடங்களுக்குள் இன நல்லிணக்கத்தை வலியுறுத்தும் ஒரு படத்திற்கு வண்ணம் தீட்ட வேண்டும்

**சமையல் போட்டி**

* 25 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு மட்டும்
* இருவர் கொண்ட குழு
* இருவரும் வெவ்வேறு இனத்தைச் சேர்ந்தவர்களாக இருக்க வேண்டும்
* 30 நிமிடங்களுக்குள் சமைக்க வேண்டும்

குடியிருப்பாளர்களுடன் ஒன்றுசேர்ந்து போட்டிகளில் கலந்துகொண்டு பயனடையுங்கள்! வெற்றி பெறுவோருக்குக் கவர்ச்சியான பரிசுகள் காத்திருக்கின்றன! போட்டிகளுக்குரிய விண்ணப்பப் படிவங்களைப் பிடோக் வசிப்போர் குழு இணையப்பக்கத்தில் பெற்றுக்கொள்ளுங்கள்.

**‘பிடோக் வட்டாரத் தூதர்’ திட்டம்**
பிடோக் வட்டாரக் குடியிருப்பாளர்களுக்கு நடவடிக்கைகள் ஏற்பாடு செய்ய விரும்புகிறீர்களா? இது குறித்த தகவல்களை அறிய எங்கள் இணையப்பக்கத்தைக் காணுங்கள்!

(அடுத்த பக்கம் பார்க்கவும்)

**8** இந்த நிகழ்ச்சி ஏன் நடத்தப்படுகிறது?

(A) ஏற்பாட்டாளரின் முயற்சிக்கு ஆதரவு கொடுக்க
(B) பிடோக் சமூக மன்ற நிகழ்ச்சி பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்த
(C) போட்டியாளர்கள் ஒன்றுசேர்ந்து போட்டிகளில் கலந்துகொள்ள வாய்ப்பளிக்க
(D) பிடோக் வட்டாரக் குடியிருப்பாளர்கள் சந்தித்துக் கலந்துறவாட வாய்ப்பளிக்க

**9** எத்தகையோர் இரண்டு போட்டிகளிலும் பங்கெடுக்க இயலும்?

(A) பிடோக் வட்டாரத் தூதர்களாக இருப்பவர்கள்
(B) பிடோக் சமூக மன்ற உறுப்பினர்களாக இருப்பவர்கள்
(C) தம் குழுவில் வெவ்வேறு இனத்தவர்களைக் கொண்டிருப்பவர்கள்
(D) போட்டிகளுக்குரிய விண்ணப்பப் படிவங்களைப் பிடோக் சமூக மன்றத்தில் பெற்றுக்கொண்டவர்கள்

**10** பின்வரும் வாக்கியங்களுள் எது விளம்பரத்தைப் பற்றிய **<u>தவறான</u>** கருத்தைக் கொண்டுள்ளது?

(A) இந்நிகழ்ச்சியைப் பிடோக் வசிப்போர் குழு ஏற்பாடு செய்கிறது
(B) விண்ணப்பப் படிவங்கள் பிடோக் சமூக மன்றத்தில் கிடைக்கும்
(C) சமையல் போட்டியில் 30 நிமிடங்களுக்குள் சமைக்க வேண்டும்
(D) வண்ணம் தீட்டும் போட்டியில் பங்கெடுக்க ஒரு குழுவில் மூவர் இருக்க வேண்டும்

## D5 வாசிப்புக் கருத்தறிதல் (10 மதிப்பெண்கள்)

பின்வரும் பனுவல்களைக் கருத்தூன்றிப் படிக்கவும். பின்னர், இவற்றையொட்டிய வினாக்களுக்கு மிகப் பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்து அவ்விடைக்குரிய எழுத்துள்ள வட்டத்தை 'கிளிக்' செய்யவும்.

<u>பனுவல் 1</u>

**தமிழ் மலர்** ஞாயிறு 11 08 2024

### சமூகத் தோட்டங்கள்

சிங்கப்பூர்க் குடியிருப்புப் பேட்டைகளில் பல சமூகத் தோட்டங்கள் உள்ளன. குடியிருப்பாளர்கள் அவற்றை அக்கறையுடன் பராமரித்து வருவது பாராட்டுக்குரியதாகும். இத்தோட்டங்களில் காய்கறிகள், மூலிகைகள் முதலான பல்வேறு செடிவகைகள் பயிரிடப்படுகின்றன. குடியிருப்பாளர்கள் அவற்றைத் தம் தேவைக்காகப் பயன்படுத்திக்கொள்கின்றனர்.

சமூகத் தோட்டங்களைப் பராமரிப்பவர்களுள் பெரும்பாலானோர் தொண்டூழியர்கள். அவர்கள் வார இறுதி நாள்களில் அத்தோட்டங்களைப் பராமரிக்கும் பணிகளில் ஈடுபடுகின்றனர். அதனால், அவர்களால் அத்தோட்டங்களைப் பராமரிப்பதற்கு அதிக நேரத்தைச் செலவிட முடிகிறது. அவர்களுள் பலர் தம் நண்பர்களுடன் சேர்ந்து கலந்துரையாடியவாறே தோட்டப் பணிகளில் மகிழ்ச்சியுடன் ஈடுபடுகின்றனர்.

தொண்டுள்ளம் கொண்ட குடியிருப்பாளர்களால் சமூகத் தோட்டங்கள் நன்கு பராமரிக்கப்படுகின்றன. ஆனால், பொதுமக்களுள் சிலர் இத்தோட்டங்களில் விளையும் காய்கறிகளையும் பழங்களையும் அனுமதியின்றிப் பறித்துச் செல்கின்றனர். இன்னும் சிலர் செடிகொடிகளை வேரோடு பிடுங்கிக்கொண்டு சென்றுவிடுகின்றனர். இத்தகைய பொறுப்பில்லாத செயல்களால் சமூகத் தோட்டங்களைப் பராமரிப்பவர்கள் வருத்தமடைகின்றனர். சமூகத்தை ஒன்றிணைக்க உதவும் சமூகத் தோட்டங்களை நல்ல முறையில் பராமரிப்பதும் பாதுகாப்பதும் பொதுமக்களின் கடமையாகும்.

(அடுத்த பக்கம் பார்க்கவும்)

**11** கட்டுரையாசிரியர் எதைப் பாராட்டுகிறார்?

(A) மக்கள் சமூகத் தோட்டங்களால் பயனடைவதை
(B) மக்கள் சமூகத் தோட்டங்களை அக்கறையுடன் பராமரிப்பதை
(C) மக்கள் செடிவகைகளைத் தம் தேவைக்காகப் பயன்படுத்துவதை
(D) மக்கள் சமூகத் தோட்டங்களில் பயனுள்ள செடிகளை வளர்ப்பதை

**12** சமூகத் தோட்டங்களைப் பராமரிப்போர் பலரும் ஏன் வார இறுதி நாள்களில் தோட்டங்களுக்குச் செல்கின்றனர்?

(A) அவர்கள் தொண்டூழியர்களாகப் பணியாற்றுவதால்
(B) அவர்கள் நண்பர்களுடன் பேசி மகிழ விரும்புவதால்
(C) தோட்டங்களைப் பராமரிக்க அவர்களுக்கு அதிக நேரம் கிடைப்பதால்
(D) தோட்டங்களைப் பராமரிக்க அவர்களுக்குப் பலரது உதவி தேவைப்படுவதால்

**13** சமூகத் தோட்டங்களைப் பராமரிப்பவர்களுக்கு எது வருத்தத்தை அளிக்கிறது?

(A) சிலர் சமூகத் தோட்டங்களைப் பராமரிக்க முன்வராதது
(B) சிலர் சமூகத் தோட்டங்களைப் பொறுப்புடன் பாதுகாக்க விரும்பாதது
(C) சிலர் சமூகத் தோட்டங்களில் விளைந்தவற்றை முறையின்றிப் பறிப்பது
(D) சிலர் சமூகத் தோட்டங்களைப் பராமரிப்பவர்களின் தொண்டுள்ளத்தை மதிக்காதது

**பனுவல் 2**

இளைஞர்கள் நால்வர் ஒரு மலைப்பாதையில் பயணம் சென்றுகொண்டிருந்தனர். ஓரிடத்தில் பெரிய பாறை ஒன்று வழியை அடைத்துக்கொண்டிருந்தது. அப்போது இளைஞர்களுள் ஒருவன் பாறையை நகர்த்த முயன்றான். ஆனால், அவனால் அப்பாறையை அசைக்கவே முடியவில்லை. மற்ற மூவரும் ஒவ்வொருவராகப் பாறையை நகர்த்த முயன்றும் பயனில்லை. இரவு நேரம் நெருங்கிக்கொண்டிருந்தது. கொடிய விலங்குகள் அங்கு வரக்கூடும் என்று இளைஞர்கள் அஞ்சினர். 'நம் பயணத்தைத் தொடர்வதற்கு வேறு வழி இல்லையா?' என்று எண்ணி இளைஞர்கள் சோகத்தில் மூழ்கினர். அவ்வேளையில் வழிப்போக்கர் ஒருவர் அங்கு வந்தார்; நடந்ததைப் பற்றிக் கேட்டறிந்தார். அவர், "வாருங்கள், நாம் ஒன்றுசேர்ந்து பாறையைத் தள்ளுவோம்," என்று நம்பிக்கையோடு கூறினார். இளைஞர்களும் வழிப்போக்கரும் கடினப்பட்டுப் பாறையைத் தள்ளியபோது பாறை நகர்ந்தது. பாதையில் இருந்த தடை அகன்றது. அப்போது வழிப்போக்கர், "பார்த்தீர்களா! நாம் பிரச்சினையைத் தனியாகச் சமாளிப்பதைவிடக் குழுவாக எதிர்கொண்டால் வெற்றி நிச்சயம்," என்று கூறினார்.

**14** இளைஞர்களுக்கு எப்போது கவலை ஏற்பட்டது?

(A) இரவில் கொடிய விலங்குகள் வந்தபோது
(B) பாதையில் பாறை ஒன்றைக் கண்டபோது
(C) பயணத்தைத் தொடர வழி தெரியாதபோது
(D) பாறையை யாராலும் நகர்த்த முடியாதபோது

**15** இளைஞர்கள் தாம் எதிர்நோக்கிய சிக்கலை எவ்வாறு சமாளித்தனர்?

(A) அவர்கள் கடினப்பட்டுப் பாறையைத் தள்ளியதன்வழி
(B) அவர்கள் வழிப்போக்கர்மீது நம்பிக்கை கொண்டதன்வழி
(C) அவர்களும் வழிப்போக்கரும் குழுவாகச் செயற்பட்டதன்வழி
(D) அவர்களும் வழிப்போக்கரும் பாறையைத் தனித்தனியாகத் தள்ள முயன்றதன்வழி

முற்றும்

**BLANK PAGE**

*Copyright Acknowledgements:*

The Singapore Examinations and Assessment Board has made every effort to trace copyright holders, but if we have inadvertently overlooked any, we will be pleased to make the necessary arrangements at the first opportunity.